**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.191/2013</u>** **தேதி.03.01.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. துர்காதேவி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. பி.வா.சா.3 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு 03.01.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கணேஷ் |
| த/பெ. | : | லட்சுமணன் ராவ் |
| வயது | : | 56/2025 |
| தொழில் | : | டிவி மெக்கானிக் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | இராணிப்பேட்டை |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

முதல் விசாரணை

**நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் எனக்காகவும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். நான் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். என்னுடைய தகப்பனார் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த பதிவு செய்யப்பட்ட உயில்சாசனத்தின் அசல் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகும். என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழின் அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும். 07.04.2011 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்படுத்திக்கொண்ட பதிவுசெய்ய்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.4 ஆகும். என்னுடைய உடன்பிறந்த சகோதரர் குமார் என்பவர் 09.04.1980 அன்று கிரையம்பெற்ற**

சொத்தின் சான்றிட்ட சார்பதிவு அலுவலக நகல் பி.வா.சா.ஆ.5 ஆகும். நானும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் சேர்ந்து வாதி மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக முதன்மை சார்பு நீதிமன்றம் கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தோம். அந்த வழக்கில் தாக்கல் செய்த பிராதின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆகும். அவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆகும். வாதி தாக்கல் செய்த தாவாவை தள்ளுபடி செய்யும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை:– ஒத்திவைக்கப்படுகிறது).